**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 138/2012 Date:22.07.2025**

**( PW2)- செல்லத்துரை**

<u>**1,2** பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

**1.** நான் இந்த வழக்கின் 2 ம் பிரதிவாதி என்றால் சரிதான். நான் என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஊர் எல்லை பிரச்சனைக்காக தாக்கல் செய்துள்ளேன். நான் இந்த வழக்கை தாக்கல் செய்யும் போதும் தற்போதும் ஊரில் ஏதேனும் பதவியில் உள்ளேனா என்றால் எந்த பதவியிலும் இல்லை. நான் யாருக்கு எதிராக என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் தெரியாது. பிராது, முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை நான் கூற எனது வழக்கறிஞரால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

**2.** ஊர் பிரச்சனைக்காக வழக்கை தாக்கல் செய்வதற்கு ஊரிலிருந்து யாரும் உரிமை கொடுக்கவில்லையென்றால் சரிதான். என்னுடைய சொந்த ஊர் எது என்றால் நங்கன் விளை. நான் மேற்படி ஊரில் சார்ந்தவர் என்பதை காட்ட ஏதேனும் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய முதல் விசாரணையில் தாக்கல் செய்துள்ள 3 ஆவணங்கள் என்ன என்றால் நெட்டாங்கோடு பஞ்சாயத்து தீர்மானம், தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட ஆவணமும், மற்றொரு ஆவணம் பற்றி தெரியாது.

**3**. இந்த வழக்கு பிரச்சனையால் தனிப்பட்ட முறையில் எனக்கு ஏதும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என்றால் தனிப்பட்ட முறையில் எந்த பாதிப்புமில்லை. எனது ஊருக்கும் பக்கத்து ஊர்களுக்கும் எந்த பகையும் இல்லையென்றால் சரியல்ல. என்ன பகை என்றால் பகை எதுவுமில்லை. எங்கள் பஞ்சாயத்தில் எத்தனை ஊர் உள்ளது என்றால் 8 ஊர் உள்ளது. அதில் ஒன்றான சுப்பிரமணியபுரம் ஊர் தான் எனது சொந்த ஊர் என்றால் சரியல்ல. செருப்பங்கோடு என்ற ஊரும் நெட்டாங்கோடு பஞ்சாயத்தில் உள்ள ஊர் என்றால் சரியல்ல. செருப்பங்கோடு என்ற ஊரும் நெட்டாங்கோடு பஞ்சாயத்தில் உள்ள ஊர் இல்லையென்பதை காட்ட ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அது என்ன ஆவணம் என்றால் குறிப்பிட்டு கூற முடியாது.

**4.** செருப்பங்கோடு ஊரை கிழக்கு மற்றும் மேற்கு செருப்பங்கோடாக ஒரு சானல் பிரிக்கிறது என்றால் சரியல்ல, மேற்கு செருப்பங்கோடு கிடையாது. செருப்பங்கோடு ஊரிலிருந்து மேற்கு செருப்பங்கோட்டில் வசிப்பதாக எனது பிராதில் 7 நபர்களை பற்றி குறிப்பிட்டுள்ளேன் , அவர்களை வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் சேர்த்துள்ளேன். நங்கன் விளை ஊரில் உள்ளவர்களும் செருப்பங்கோடு ஊரில் உள்ளவர்களும் அருகருகே வசிக்கிறார்கள் என்றால் சரிதான். பக்கத்து பக்கத்து இடத்தில் கட்டிடங்கள் கட்டினாலும் அவர்களது பஞ்சாயத்தில் தான் கட்டிட அனுமதியும், வரியும் செலுத்துவார்கள் என்றால் சரிதான்.

**5.** மேற்படி இரண்டு ஊர் மக்களும் அருகருகே வசித்தாலும் அரசு அதன் சட்ட விதிகளுக்கு உட்பட்டு தான் வரி வசூல் செய்கிறது என்றால் சரிதான். எங்கள் ஊரை சேர்ந்த ரவீந்தர் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி நபர் மதுரை உயர்நீதிமன்றத்தில் W.P(MD) No. 2908/2021 என்ற எண்ணில் வழக்கு தொடுத்து 19.02.2021 உத்தரவின் படி வழக்கு 2 ம்பிரதிவாதி 4 வார காலத்திற்குள் உத்தரவை நிறைவேற்ற வேண்டும் என்றும் அந்த உத்தரவில் மேற்படி நபருக்கு செருப்பங்கோடு மேற்கு என்று வரி ரசீதை கொடுக்க வேண்டும்ஏ ன்று உத்தரவு பிறப்பித்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

**6.** பொதுவாக ஒரு ஊரின் பெயரைரே யா, எல்லையையோ மாற்றியமைக்க வேண்டிய அதிகாரம் அரசிற்கு தான் உள்ளது என்றால் சரிதான். எனவே நான் கூறுவது போல் ஒரு ஊரின் பெயரை மாற்றுவதற்கோ தனிநபரின் பெயரில் வரியை வசூலிப்பதற்கோ அரசிற்கு வலியுறுத்த எனக்கு அதிகாரமில்லையென்றால் சரியல்ல. நான் பொய்யான சங்கதிகளை கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் எந்த சம்பந்தமுமில்லாமலும் பாதிப்பும் இல்லாமலும் நல்ல அமைதியான சுழலில் வசித்து வரும் ஊர் மக்களின் அமைதியை கெடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் இந்த வழக்கு 1,2 பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றாலும் சரியல்ல.

<u>**3,4** பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

மேற்படி குறுக்கு விசாரணை adopt செய்யப்படுகிறது, மேலும்

**1.** எனது வீட்டில் எத்தனை நபர் வசித்து வருகிறோம் என்றால் 4 நபர்கள் வசித்து வருகிறோம்,நான்,என் மனைவி விஜயலட்சுமி, எனது மகன் பார்த்திபன் மற்றும் மருமகள் வினிதா, அவர்களது 1 வயது குழந்தை ஆகியோர் வசித்து வருகிறோம். மேற்படி

நபர்களின் ஆதார் அட்டையும், குடும்ப அட்டையும் , மேற்படி குழந்தையின் பிறப்பு சான்றிதழையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்யலாம். மேற்படி ஆவணங்களில் எங்கள் விலாசத்தில் சுப்பிரமணியபுரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. செருப்பங்கோட்டில் வசித்து வரும் சுதாகர், செல்லத்துரை, ரவீந்தர் ஆகியோரை தெரியுமா என்றால் தெரியும்.

**2.** குருந்தன்கோடு கிராம சர்வே எண் 215,216,217 ஆகியவை இரட்டை கரை சானலின் மேற்கு பக்கம் அமைந்துள்ள சொத்துகள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஆவணங்களின் பதிவு பத்திரங்களிலும் மற்ற ஆவணங்களிலும் செருப்பங்கோடு என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சுப்பிரமணியபுரத்தில் வசித்து வரும் பஞ்சுநாடார் மகன் தவசி முத்து நாடார் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. செருப்பங்கோடு ரவீந்தர் என்பவரின் வீடு மேற்படி புல எண்ணில் உள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. ரவீந்தர் என்பவரின் வீட்டு தரைத்தளத்திற்கு செருப்பங்கோடு முகவரியிட்டு வீட்டு வரி ரசீது வழங்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

**3**. மேற்படி வீட்டின் மேல் தளத்திற்கு செருப்பங்கோடு முகவரியிட்டு வீட்டு வரி ரசீது போடாததால் உயர் அதிகாரிகளுக்கு புகார் மனு அனுப்பியதன் பேரில் வட்டார வளர்ச்சி அலுவலர் குருந்தன்போடு ஊராட்சி ஒன்றியம் ,செருப்பங்கோடு முகவரியிட்டு ரசீது வழங்க உத்தரவிட்டு நெட்டாங்கோடு ஊராட்சி தலைவருக்கு கடிதம் அனுப்பியது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி உத்தரவிட்ட பிறகும் ஊராட்சி தலைவர் செருப்பங்கோடு முகவரியில் ரசீது வழங்காததால் மேற்படி ரவீந்தர் மாண்புமிகு உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் WP(MD) No. 7908/ 2021 என்ற வழக்கின் மேற்படி ஊர் பெயரில் வரி ரசீது வழங்க வேண்டி உத்தரவு பெற்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

**4.** மேற்படி உத்தரவின் படி ரவீந்திரனுக்கு செருப்பங்கோடு ஊர் பெயரில் கதவு எண் வழங்கி நீதிமன்ற அவமதிப்பு ஏற்படாது இருக்குமாறும் அவ்வாறு ஏற்பட்டால் ஊராட்சி மன்ற தலைவர் தான் பொறுப்பு என்று பி டி ஓ கடிதம் அனுப்பிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் குறிப்பிட்டுள்ள செருப்பங்கோடு பகுதியில் தற்போது 23 வீடு கள் உள்ளது என்றால் சரியல்ல, 7 முதல் 8 வீடுகள் உள்ளது. நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் தற்போது 23 வீடுகள் உள்ளது என்றாலும் சரியல்ல. முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய வீட்டு வசதி

திட்டத்தின் கீழ் செருப்பங்கோடு முகவரியில் சுப்பிரமணிய நாடார் என்பவருக்கு வழங்கப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

**5.** 2004 ல் செருப்பங்கோடு சுடலைமாடன் கோவில் முன்பு ஒரு சம்பவம் நடந்ததாக இரணியல் காவல்நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை எண் 891/2004 என்ற எண்ணில் வழக்கு பதியப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. செருப்பங்கோட்டில் அமைந்துள்ள ஊசிக்காட்டு சிவ சுடலைமாட சுவாமி கோவிலுக்கு அரசு கடித போக்குவரத்து நடந்த விவரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் குறிப்பிட்டுள்ள செருப்பங்கோடு மேற்கு பகுதியல் உள்ள வீடுகளுக்கு 2020 வரை வீட்டு வரி, குடிநீர் வரி செருப்பங்கோடு என்ற பெயரில் தான் வழங்கப்பட்டது என்றால் சரிதான். 2020 ற்கு பிறகு வந்த பஞ்சாயத்து தலைவி என்னுடைய தூண்டுதலின் பேரில் செருப்பங்கோடு ஊர் பெயரிட்டு ரசீது வழங்க மறுத்துள்ளார் என்றால் சரிதான்.

**6.** அமைதியாக வாழ்ந்து வரும் ஊர் மக்களுக்கிடையே கலவரத்தை உண்டு பண்ணி விரோதத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் செயல்பட்டு வருகிறேன் என்றால் சரியல்ல. சுப்பிரமணியபுரத்தில் வசித்து கொண்டு நங்கன்விளை கிராமத்தில் வசிப்பதாக பொய்யாக குறிப்பிட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நங்கன் விளை ஊருக்கு தலைவர், செயலாளர், பொருளாளர் , செயற்குழு உறுப்பினர்கள் கொண்ட கமிட்டி உள்ளது என்றால் சரிதான். மேற்படி கமிட்டி நபர்கள் செருப்பங்கோடு கிராமத்திற்கெதிராக செயற்படவில்லையென்றால் சரியல்ல. இந்த வழக்கில் மேற்படி கமிட்டி நபர்கள் தரப்பினர்களாக சேர்க்கப்படவில்லையென்றால் சரிதான்.

**7.** செருப்பங்கோடு என்ற சிறிய கிராமம் நெட்டாங்கோடு பஞ்சாயத்த்திற்குட்டபட்ட பகுதியில் உள்ளது என்றால் சரியல்ல. பேயன்குழி பாலத்திலிருந்து காரங்காடு, நெட்டாங்கோடு செல்லும் சாலை, பண்டாரவிளை ஊர் இரட்டை கரை சானல் ஓரமாக உள்ளது என்றால் சரிதான். அதை தொட்டு ஒரு கம்பி பாலம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கம்பி பாலம் முதல் புளியடி விளை செல்லும் சாலை வரை உள்ள பகுதி தான் நான் தாவாவாக குறிப்பிடும் செருப்பங்கோடு மேற்கு பகுதி என்றால் சரியல்ல, மேற்படி இடம் நங்கன் விளை ஆகும்.

**8.** கம்பி பாலம் தாண்டி மேற்கு பகுதியில் அருள்மிகு ஊசிக்காட்டு சிவ சுடலை மாடன் கோவில், செருப்பங்கோடு உள்ளது என்றால் சரிதான், ஆனால் அது நங்கன் விளையில் உள்ளது. கம்பி பாலம் முதல் புளியடி செல்லும் சாலை வரையிலும் 2017

ல்செருப்பங்கோடு பகுதியில் 13 வீடுகள் இருந்ததாக பீ டிஓ தெரிவித்த விவரம் பற்றி தெரியுமா என்றால் சரிதான். தாவா பகுதியில் உள்ள அனைத்து மக்களின் குடும்ப அட்டை சொத்து ஆவணங்கள் வீட்டு வரி ரசீது, வங்கி கணக்கு புத்தகம், தேர்தல் அடையாள அட்டை, பாஸ்போர்ட் முதலிய ஆவணங்களில் செருப்பங்கோடு முகவரி தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**9.**செருப்பங்கோடு, நங்கன் விளை மக்களிடையே எந்த பிரச்சனையுமில்லையென்றாலும் என்னால் தான் பிரச்சனை ஏற்படுகிறது என்றாலும் சரியல்ல. இந்த வழக்குதாக்கல செய்யப்பட்ட பிறகு எனது செல்வாக்கை பயன்படுத்தி செருப்பங்கோடு பெயரில் ரசீது வழங்குவதை தற்போது தடுத்து வைத்துள்ளேன் என்றால் சரிதான், சரியல்ல என்று சாட்சி மாற்றி கூறுகிறார். ஒரு ஊரின் பெயரை மாற்ற வேண்டுமென்றால் பத்திரிக்கை விளம்பரம், பொதுஅறிவிப்பு முதலியன செய்த பின்பு தான் அரசிதழில் பெயர் மாற்ற முடியும் என்றால் சரிதான்.

**10.** மேற்படி எந்த நடவடிக்கைகளையும் நான் மேற்கொள்ளவில்லையென்றால் சரிதான். அரசை தரப்பினராக சேர்க்க வேண்டி செய்ய வேண்டிய எந்த நடவடிக்கைகளையும் நான் மேற்கொள்ளவில்லையென்றால் சரியல்ல. அருள்மிகு ஊசிக்காட்டு சிவ சுடலை மாடன் கோவில், செருப்பங்கோடு அமைந்துள்ள இடத்தின் சர்வே எண் என்ன என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் பிராதில் குறிப்பிட்டுள்ள 7 நபர்களின் விலாசமும் சொத்தும் எந்த சர்வே எண்ணில் அமைந்துள்ளது என்பது பற்றி நான் குறிப்பிடவில்லையென்றால் குறிப்பிடவில்லை. எனது வழக்கை உறுதிப்படுத்த நீதிமன்ற ஆணையர் நடவடிக்கையை மேற்கொள்ள மனு செய்தேனா என்றால் மனு தாக்கல் செய்யவில்லை.

**11.** நங்கன் விளை ஊர் எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் அது பற்றி தெரியாது. எனது வீடு சுப்பிரமணியபுரத்தில் எந்த சர்வே எண்ணில் அமைந்துள்ளது என்றால் தெரியாது. நான் பிராதில் நங்கன் விளை கிராமம் எந்த எல்கைக்குட்பட்டு வருகிறது என்று பட்டிகை கொடுக்கவில்லையென்றால் சரியல்ல. நான் பிராதில் குறிப்பிட்டுள்ள 7 நபர்களின் விலாசம் செருப்பங்கோடு இல்லையென்றும் நங்கன்

விளையில் வருகிறது என்றும் காட்டுவதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லையென்றால் தாக்கல் செய்துள்ளேன்.

( ஒப்பம் )

மாவட்ட உரிமையியல் நீதிபதி

இரணியல்